ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

பணமுள்ளவனைப் பின்பற்றி பிராணிகள் நடப்பார்கள். அல்லது ஆயுதபலமுள்ளவனை அச்சமுற்று அனுஸரிப்பார்கள். அதுவுமில்லாமல் சரீரபலமாத்திரமிருக்குமாயினும் பயப்படுவார்கள். இது ஒன்றுமில்லாவிடில் அவனை லக்ஷியம் செய்யமாட்டார்கள். நம் முன்னோர்கள் தேடிய தனம் தபஸ் ஒன்றே. அதனாலவர்களைத் தபோதனர் என்பர். அதனால் அவர்களுக்குக்கிடைத்த ஆயுதம் சாபம். அதற்காக அவர்களை சாபாயுதர்களெனச் சொல்வதுண்டு. யோகாப்பியாசத்தினாலோ, ரஸாயன ஸேவனத்தினாலோ தீர்க்கமான ஆயுளையும், திடமானதேஹபலத்தையும் அடைந்திருந்தார்கள், அதுகொண்டு அவர் காயசித்தி பெற்றவர்களென்று கூறுவார்கள். அத்தகைய மஹான்களுடைய வம்சத்திலுதித்த தற்காலத்திய நம்மவர்களுக்கு காலதோஷத்தால் கிரமப்படி கிடைக்கவேண்டிய தபஸ் என்ற தனம் கிடைக்கவில்லை. அதனால் நம் முன்னோர்கள் கையிலேந்திய ஆயுதத்தைத் தரிக்க பரம்பராபாத்தியமுடையவர்களாயினும் அதனையிழந்துவிட்டோம். ஆஹார நியமமே அற்றுப்போன இத்தருணத்தில் ரஸாயனஸேவை எங்கே? யோகாப்பியாஸமெங்கே? இவ்வாறு ஒருவிதமான பலமுமில்லாத நம் ஆர்யச் சிறுவர்களைப் பரிஹஸிப்பதுபோல் பலர் புத்தி சொல்லப்புறப்பட்டுவிட்டார்கள். சரீரபலம் குன்றிவிட்டது பாலிகா விவாஹத்தாலாம். அதை மாற்றி முன்போல பலத்தை அடையவேண்டுமானால் பிரௌடா விவாஹம் ஒன்றே இன்றியமையாத ஸாதனம். அதனாற்றான் தேசம் முன்னேற்றமடையும். அதற்காக சிறுவர்கள் பாடுபடவேண்டுமென்று பிரஸங்கமேடையில் பலத்த சத்தம் இடுகிறார்கள். கருணாநிதியென்று தன்னைத் தானாகவே நினைத்துக்கொண்ட சிலர் பாலிகா விவாஹத்தால் பால்ய விதவைகள் அதிகப்படுகிறார்கள். அதைக் குறைக்க இவ்விவாஹ முறையை மறுக்கவேணுமென்றார்கள். வேறுசிலர் விதவாவிவாஹத்தையே செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஒருதடவை விவாஹம் செய்வதிலேயே வாதக்ஷிணை ஜாஸ்தியாகி வரன் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். விதவைகளுக்கும் விவாஹம் செய்யத்தொடங்கிவிட்டால் எப்படியாகுமோ என்று கவலைப்படுகிறார் பலர். பிரபஞ்சத்தில் பிரஜாவிருத்தி ஜாஸ்தியாய் விட்டபடியாலும், உண்டானப் பிரஜைகளுக்கெல்லாம் போதிய உணவு பொருள் முன்போல் விளையாதபடியாலும், கர்ப்பத்தடை செய்து பிரஜைகளை பிறக்காமல் செய்துவிட வேண்டுமென்று பெரிய உபதேசம் செய்கிறார் சிலர். விதவைகள் முதற்கொண்டு விவாஹம் செய்வானேன். கர்ப்பத்தடைக்கு முயலுவானேன் என்று கேட்கின்றார். பலர். சேற்றில் காலை விடுவானேன். ஜலத்தைவிட்டு அலம்புவானேன். இவ்வாறு கண்டாகண்டபடி அவரவர்களுக்குத் தோன்றியதைப் பேச நேர்ந்திடவே இவைகளைக்கேட்கின்ற சிறுவர்களது புத்தியும் மயங்கி ஹிதம் சொல்லுபவரிடமும் துவேஷத்தைஅடைகிறது. அப்படியடையமால் சிறுவர்களும் நற்புத்தியைநாடி நன்மை அடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்,

பராசரஸ்மிருதியும் பரிஷத்தும்.

பாராசரஸ்மிருதி கலியுகத்தில் தர்மநிருபணம் செய்வதற்கு ஏற்பட்டதாக அதன் ஆரம்பத்திலிருந்து தெரியவருகிறது. அங்கு ஆரம்பத்தில் "இமயமலையில் ஏகாக்ரமாக ஸமாதியிலிருக்கும் வியாஸபகவானை சரணமடைந்த மஹரிஷிகள் இக்கலியுகத்தில் மனிதர்களுக்கு ஹிதமான தர்மத்தையும் சௌசாசாரத்தையும், உள்ளபடி உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டதாகவும் அதற்கு வ்யாஸபகவான்

नचाहं सर्वतत्वज्ञः कथं धर्मं वदाम्यहम् ।
अस्मत्पितैव प्रष्टव्य इति व्यासस्सुतोऽब्रवीत् ॥

நான் ஸர்வதத்வங்களையும் அறிந்தவனல்ல. தர்மத்தை நான் எப்படிச் சொல்வேன். ஆகையால் என் பிதாவைத்தான் கேட்கவேண்டும் என்று பதிலுரைத்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் பாராசரதர்மசாஸ்திரம் இக்கலியுகத்துக்காக ஏற்பட்டதென்று தெரிகிறது. இதில் வ்யாஸரே தனக்கு ஸகல தர்மதத்வங்களும் தெரியாதென்றால் மற்றவர்களா தர்மதத்வங்களையறிந்து உபதேசிக்க அதிகாரிகளாவார்கள். அதற்காகவே எட்டாவது அத்தியாயத்தில் தர்மதத்வத்தை நிச்சயிப்பதற்கு பரிஷத்தின் தாரதம்யம் கூறப்படுகிறது.

चत्वारो वा त्रयो वापि वेदवन्तोऽग्निहोत्रिणः ।
ब्राह्मणानां समर्था ये परिषत्साभिधियते ॥

வேதாத்யயனம் செய்து அக்நிஹோத்ராதிகளையும் அநுஷ்டித்து பிராம்மணர்களுக்குள்ளும் அதிக ஸாமர்த்தியம் வாய்ந்த நான்கு பேர்களாவது, அது ஸம்பவிக்காவிடில் மூன்றுபேர்களாவது, பரிஷத் எனப்படும். அக்னிஹோத்ரிகள் கிடைக்காவிடில் வேதாத்

யயனம் செய்த ஐந்துபேர்களாவது பரிஷத்தாகலாம். அவ்விதம் ஐந்துபேர்கள் கிடைக்காவிடில் மூன்றுபேர்களாவது மூன்றுபேர்களும் கிடைக்காதபக்ஷத்தில் வேதம், விருதம் இவ்விரண்டிலும் ஸ்நாதரான ஒருவராவது பரிஷத்தாகலாம் என்று கூறப்பட்டுள்ளது. இதற்குமேல் பிராம்மணரென்று பெயரைமாத்திரம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் பரிஷத்தாகவே ஆகமாட்டார்களென்றும், வேதாத்யயனம் செய்யாதபடியால் தர்மத்தை போதிப்பிக்க அதிகாரிகளாக ஆகவேமாட்டார்களென்றும், விரிவாய் சொல்லப் படுகிறது. இவ்வாறு பிராம்மணருக்கே வேதாத்யயனக்குறைவால் தர்மோபதேசாதிகாரமில்லை என்றபோது பிராம்மணரல்லாதாருக்கு இதைப்பற்றிப் பேச அதிகாரம் எங்குளது ?

“ दुश्शीलोपि द्विजः ” என்ற சுலோகத்தில் இக்கருத்தையே விரித்துரைத்துள்ளார். இத்தகைய பிராம்மணர்களை அதிக்ரமித்து, தர்மவிஷயத்தில் அரசாங்கத்தார் தலையிடக்கூடாது. அங்ஙனமே அதே பாராசரஸ்மிருதி 8-வது அத்தியாயத்தில்

ब्राह्मणांस्तानतिक्रम्य राजा कर्तुं यदीच्छति ।
तत्पापंशतधा भूत्वा राजानामधिगच्छति ॥

அந்த பிராம்மணர்களை அதிக்ரமித்து அரசன் எந்த பாபத்தைச் செய்யவிரும்புகிறானோ அந்த பாபம் நூறுமடங்காகி அரசனையே அடையும் எனக் கூறப்படுகிறது. ஆகையால் தர்மத்தை விசாரித்து நிர்ணயிக்க பிராம்மணபரிஷத்துக்குத்தான் அதிகாரமிருப்பதால் காசிநகரத்தில் நடந்த பண்டிதபரிஷத்திலும், ஸமீபத்தில் சென்னையில் நடந்த பண்டிதபரிஷத்திலும் தீர்மானிக்கப்பட்டபடி விவாஹாதிதர்மங்களை உசிதகாலத்திலேயே செய்து சிரேயஸ்ஸுகளையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

“ பத்திரிகாப்பிரசாரம். ”

பிரியவாசகர்களே !

இப்பவும் இவ்வுலகில் தேசியஸமாசாரங்களையும் அரசாங்க விஷயங்களையும், வெளியிடும் பத்திரிகைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பலவிருக்கின்றனவென்பது தெரிந்த விஷயமேயாகும்.

ஆனல் அப்பத்திரிகைகளில் தேசிய, ராஜரீகஸமாசாரங்களைத்தவிர மதவிஷயங்களைப் பிரசுரிப்பதில்லை. இதனல் மதவிஷயத்தில் அப் பத்திராதிபர்களுக்கு அதிக அவமதிப்பும், துவேஷமும் நன்கு புலப்படுகின்றதல்லவா? மதாபிமானம் அடியோடு அற்றுப்போன இந்த ஸமயத்தில் பத்திரிகைமூலமாகவும், தகுந்த வித்வான்களின் உபன்யாஸமூலமாகவும்தான் தர்மதத்வங்களை ஜனங்களுக்குள் பாவச்செய்யவேண்டும். அன்றியும் அரசாங்கத்தாருக்கு நமது வைதிகமதத்தின் இயல்பை எடுத்துரைப்பதற்கும் இதுதான் உசித உபாயமாகும். இதுவரையில் தேசியஸமாசாரப் பத்திரிகை களில் மதவிஷயங்கள் பிரசுரிக்கப்படாமலும், சாஸ்திரவிருத்தவிஷ யங்கள் அனேகம் பிரகாசப்படுத்தியிருப்பதாலும்தான் அரசாங் கத்தார் சாஸ்திரஸம்பிரதாய விருத்தமான பல சட்டங்களை செய் யும்படி நேர்ந்தது. மதாந்தரஸ்தர்களான அரசர்கள் மதாந்தரஸ் தர்களைப் பரிபாலிக்கவேண்டுமானல் அவர்களின் மதத்தையும் உண்மையாக அறிந்திருக்கவேண்டுமல்லவா? ஆகவே அரசாங்கத் தாருக்கு நமது மதஞானத்தை உண்டுபண்ணுவதற்கு பத்திரிகை தான் மூலாதாரம்.

இக்கருத்தைக் கொண்டே மதவிஷயங்களை வெளியிடுவதற் கென்றே ஒரு பத்திரிகை தினசரிப் பதிப்பாக ஆங்கிலத்தில் நட த்தவேண்டுமென்று பலர் பெருமுயற்சி எடுத்துவருகிருர்கள். அவர்கள் செய்துவரும்பிரயத்தினம் ஸர்வேசுவரனின் அனுக்ரஹத் தால் சீக்கிரத்தில் ஸபலமாய் முடிந்துவிடவேண்டுமென்று எனது பிரார்த்தனை. அரசாங்கத்தாருக்கும், ஆங்கிலம் கற்றுணர்ந்த நம்மவர்களுக்கும் இவ்வாங்கிலப் பத்திரிகை உபயோகமாக இருப் பினும், ஆங்கிலத்தில் அதிக பாண்டித்தியமில்லாதவர்களுக்கும் உபயோகமாக இருக்கும்படி தமிழ் பாஷையிலும் பத்திரிகை அவ சியமானதுபற்றி ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்களின் அனுக்ரஹத்தை அவலம் பித்து அனேக வருஷகாலமாக இவ்வார்யதர்மபத்திரிகை தமிழ் பாஷையில் வெளியிடப்பட்டு வருகின்றது. மதவிஷயங்களை வெளி யிடும் பத்திரிகை ஸம்பந்தமாக புதிதாக நாம் எவ்விதப் பிரயத்தன மும், சிரமமும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. தற் போது பிரசாரத்திலிருக்கும் இவ்வார்யதர்ம பத்திரிகையைக்

கொஞ்சம் விருத்தியடையும்படி வைதிகமதாபிமானிகள் யாவரும் பிரயத்தினம் எடுத்துக்கொண்டால் போதுமானது. ஒரு பத்திரிகையைப் புதிதாக ஆரம்பம் செய்வதில் ஏற்படும் கிரமத்தைக்காட்டிலும், பத்திரிகையை அபிவிருத்தியடையும்படி எடுத்துக்கொள்ளும் சிரமம் ஸ்வல்பந்தானென்பது நான் சொல்லவேண்டுமா? மதவிஷயங்களில் பீடாதிபதிகளின் அபிப்பிராயத்தை அனுஸரித்துத்தான் பின்பற்றவேண்டும். பகவத்பாதர், ராமாநுஜர், முதலியவர்களின் சிஷ்யர்களாகிய நம் குருபீடங்களிலிருந்து வெளியாகும் பத்திரிகையை ஆதரிக்கக்கடமைப்பட்டிருக்கிறோம். ராமாநுஜ சித்தாந்தத்தையும், மத்வசித்தாந்தத்தையும், வெளியிடும் பத்திரிகைபோல் பகவத்பாத சித்தாந்தத்தை வெளிப்படுவதற்காக இப்பத்திரிகை ஏற்படவில்லை ஆனால் யாவருக்கும் பொதுவான தர்மதத்துவங்களை பக்ஷபாதமின்றி வெளியிடுவதற்காகவே இப்பத்திரிகை ஏற்பட்டுள்ளது என்ற கௌரவம் இப்பத்திரிகைக்கு உண்டென்பது பிரகாசமாய்த் தெரிந்தவிஷயம். ஆகையால் நமது புராதன ஆசாரங்களிலும், சாஸ்திரங்களிலும், ஸ்வபாவமாய் ஏற்பட்டுள்ள சிரத்தையினாலாவது, குருபீடங்களில் பக்தியின் மிகுதியினாலாவது என்னுடைய பிரார்த்தனைக்கிணங்கி இப்பத்திரிகையை அபிவிருத்தியடையும்படி செய்வது தங்கள் கடமையாகக் கருதவேண்டும்.

இப்பத்திரிகையை ஏழைகள்முதல் தனிகர்களீறாகவுள்ள யாவரும் வாங்கி வாசித்து தர்மங்களை உணரவேண்டும் என்று நினைத்துத்தான் வருஷம் 1-க்கு சந்தா ரூ 3-ஆக ஏற்படுத்தியிருக்கிறது. இந்த சந்தாவைச் செலுத்துவது யாவருக்கும் எளிதேயாகும். ஒரு கிராமத்துக்கு ஒரு பத்திரிகையாவது இருந்தே தீரவேண்டும். இதுஸம்பந்தமாகவே ஸ்ரீ பகவத்பாதாளின் ஆக்ஞையையனுஸரித்து நான் இப்பத்திரிகையின் அபிவிருத்திக்காகப் பிரசாரம் செய்துவருகிறேன். இதன்மூலமாகவும் தங்களை இதன் அபிவிருத்தியின்பொருட்டு உதவிபுரியுமாறு பிரார்த்திக்கிறேன்.

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

மலர்கள்.

(672-வது பக்கத்தொடர்ச்சி.)

धर्मार्जितधनक्रीतैः यः कुर्याद्देवतार्चनम् ।
उद्धरिष्यत्यसन्देहात् सप्तपूर्वान् तथाऽपरान् ॥

'தர்மப்படி சேகரிக்கப்பட்ட பொருள்களைக்கொண்டு மலர்களை விலைகொடுத்து வாங்கி அதனாலர்ச்சிப்பவன் முன்னேழு பரம்பரைகளையும் பின்னேழு பரம்பரைகளையும் மேன்மைபெறச்செய்வான் என்பதற்கையமில்லை' என விஷ்ணுதர்மோத்திரத்திற் கூறியுள்ளது பிராமணரல்லாதவர்களைப் பொருத்ததென்று கொள்ளத்தக்கது. எனெனில்

समित्पुष्पकुशादीनि ब्राह्मणः स्वयमाहरेत् ।
शूद्रनीतैः क्रयक्रीतैः कर्म कुर्वन् पतत्यधः ॥

'ஸமித்துக்கள், புஷ்பங்கள் தர்ப்பங்கள் முதலியவைகளைப்பிராமணர்கள் தானே கொண்டுவரவேண்டும். அப்படிச்செய்யாது சூத்திரர்களாற் கொண்டுவரப்பட்டவைகளாலும் விலைகொடுத்துப் பெற்றவைகளாலும் பூஜை முதலிய கர்மாக்களைச் செய்வானாயின் பதனமடைவான்' என்னும் பவிஷ்யத்புராணச் செய்யுளுடன் இதனை இணைத்துப்பார்க்குங்கால் அஃது விளங்குகிறது. 'பிராமணர்கள் விலைக்கு வாங்கிய பூக்களால் அர்ச்சிக்கக்கூடாது' என்ற தடைச்சொற்றொடர் பிரதிதினமும் செய்துவரும் பூஜையைப் பொருத்தது. இலக்ஷார்ச்சனை முதலிய விசேஷபூஜைகளுக்கு அவ்வாறு செய்வது தோஷமாகா.

लक्षपुष्पार्चनादौतु क्रयक्रीतमपीष्यते । (मन्त्रकोशः)

'இலக்ஷபுஷ்பார்ச்சனை முதலியவைகளில் விலைகொடுத்து வாங்கிய மலரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே' என்றதும்,

द्विजःस्तृणैधः पुष्पाणि सर्वतः स्ववदाहरेत् ।
देवाद्यर्थन्तु कुसुममस्तेयं मनुरब्रवीत् ॥ (याज्ञवल्क्यः)
गोऽग्न्यर्थे तृणमेधांसि वीरुद्वनस्पतीनाम् पुष्पाणि स्ववदाददीत ॥
(गौतमः)

पुरोपवनादेः चौर्येणापि कुसुममादेयम् । (नित्योत्सवः)
'மறையோர்கள் புற்களையும், புஷ்பங்களையும் தன் பொருளைப்போல் கருதி எங்கிருந்தும் எடுத்துவரலாம். தேவதைகளின் நிமித்தம் அவ்வாறு பிறரறியாமல் எடுத்துவருவதுகூட திருட்டுத்தனமாகக் கருதத்தகாது' என்று மனு கூறியுள்ளார்.

'பசுக்கள் தின்பதற்கு புற்களையும், அக்கினியில் ஹோமஞ் செய்ய ஸமித்து முதலியவைகளையும், தேவதைகளையர்ச்சிக்க கொடிசெடிகளினின்றும் புஷ்பங்களையும் தன் பொருள்களாகக்கருதிக்கொண்டுவரலாம்.'

'பட்டினத்திற்குப் பொதுவாகவுள்ள பூந்தோட்டங்களினின்றும் பூக்களைத் திருட்டுத்தனமாகவும் எடுக்கலாம்' என்ற வாக்கியங்களெல்லாம் விசேஷபூஜைகளைக் குறிப்பவைகளே.

புஷ்பங்களைப் பிறரிடம் யாசிப்பது தகாதென்று வராஹபுராணத்திற் கூறியிருப்பதாலும், அப்படி யாசித்தலும் தீர்த்தக்கரையிற் கூடாது, மற்றவிடங்களில் அவ்வாறு யாசிப்பதும் பிழையாகாதென்றும், தன் இனத்தார் கொண்டுவந்த மலர்களை விலைகொடுத்துப் பெற்று தன்னுடையதாகச் செய்துகொண்டு அவைகளாற் பூஜிக்கலாமெனவும் பிரயோகபாரிஜாதத்திற் கூறியிருப்பதாலும், அந்தணர்களும் விசேஷபூஜைகளுக்கு மலர்களை விலைகொடுத்துப் பெறலாம் என்பது விளங்குகிறது. ஆனாலும் அவை அந்தணர்களாலேயே கொய்யப்பட்டிருக்கவேண்டும்.

விலக்குவதற்குறிய மலர்கள்.

क्रिमिकीटावपन्नानि शीर्णपर्युषितानिच ।
स्वयं पतितपुष्पाणि त्यजेदुपहतानिच ॥
निर्गन्धकेशकीटादिदूषितश्चोग्रगन्धकम् ॥
मलिनं तुच्छसंस्पृष्टमाघ्रातं स्वविकासितम् ॥
अशुद्धभाजनानीतं ज्ञात्वा नीतञ्च याचितम् ।

பூச்சிகளுடன் கூடியதும், உதிர்ந்த இதழ்களையுடையதும், பழமையானதும், தானாக உதிர்ந்ததும், பக்ஷி முதலியவைகளின் மலத்தாற் கெடுக்கப்பட்டதும், வாசனையற்றதும், மயிர்களாலும் புழுக்களாலுங் கெடுக்கப்பட்டதும், கடுமையான மணம் பொருந்திய

தும், அழுக்கடைந்ததும், கீழ்ஜாதியோர்களால் ஸ்பர்சிக்கப்பெற்றதும், முகரப்பட்டதும், மொட்டுகளாகக் கொணர்ந்து நாமாக மலரச்செய்தனுகளும், அசுத்தபாத்திரத்திற் கொண்டுவரப்பட்டதும், மத்யான்ஹஸ்னனத்திற்குப்பிறகு கொய்ததும், யாசிக்கப்பட்டதுமான மலர்களையர்ச்சிப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடாது.

निर्गन्धपुष्पजातीषु पलाशकुसुमैरपि ।
जपाबन्धूकपुष्पैश्च मन्दारैरपि पूज्यते ॥

'வாஸனையற்ற பூக்களுள் புரசம்பூ, செவ்வரத்தைப்பூ, உச்சித்திலகப்பூ, மந்தாரைப்பூ முதலியவைகளால் பூஜை செய்யலாம்' என்று ஸ்வச்சந்தஸாரத்தில் கூறியவாறு வாசனையற்றதாகவிருப்பினும் சில மலர்கள் இறைவன் வழிபாட்டிற்கிசைந்ததென்பது தெளிவுபடுகிறது.

पुष्पं वस्त्रेन बध्नीयात् शिरसा नवहेद्बुधः ।
नयेत् पत्रपुटेनैव पाणिनाऽलम्ब्य वाग्यतः ॥
नाग्निना सहपुष्पं वा जलञ्चान्नं नचानयेत् ।
जलाग्निगन्धपुष्पान्नं नमूर्ध्नी सेनवाहयेत् ॥

மலர்களை வஸ்திரத்திற்கட்டியெடுத்துக்கொள்ளக்கூடாது, தலையில் வைத்துக்கொண்டுஞ் செல்லக்கூடாது. இலைகளால் தயாரித்த தொன்னையில் பூக்களை வைத்துக் கையிலேந்தி வாய்பேசாது எடுத்துச்செல்லவேண்டும்.

ஜலம், புஷ்பம், அன்னம் இவைகளை அக்கினியுடனெடுத்துச் செல்லக்கூடாது. தீர்த்தம், நெருப்பு, சந்தனம், புஷ்பம் அன்னம் இவைகளை தலையிலும் தோளிலும் எடுத்துப்போகக்கூடாது.

देहोपरि धृतं यच्चाप्यधोवस्त्रधृतञ्च यत् ।
वामहस्ते धृतं यच्च जलेन क्षालितं च यत् ॥
देवतास्तन्नगृह्णन्ति पुष्पन्निर्माल्यताङ्गतम् ।

சரீரத்தில் தரிக்கப்பட்டதும், அரைவேஷ்டியிலெடுத்துச்செல்லப்பட்டதும், இடதுகையினுற்றூங்கப்பட்டதும், ஜலத்தில் சுத்தி செய்யப்படாததுமான மலர் நிர்மால்யமெனப்படுகிறது. அதனை தேவதைகள் ஏற்றுக்கொள்வதில்லை.

समित्पुष्प कुशादीनि वहन्तं नाभिवादयेत् ।
तद्धारीचैव नान्याहि निर्माल्यन्तद्भवेत्तयोः ॥

ஸமித்துக்கள், புட்பங்கள், தர்பங்கள் இவைகளை எடுத்துச்செல் வோரை நமஸ்கரிக்கக்கூடாது. இவைகளைத் தூக்கிச்செல்வோரும் பிறரை வணங்கக்கூடாது. அவ்வாறு செய்யின் அவ்விருவரு டைய கையிலிருப்பவைகளும் நிர்மால்யமாகிவிடும்.

शुष्कं पर्युषितं कृष्णं भूमिगं नार्पयेत्सुमम् ।
चम्पकं कमलं त्यक्त्वा कलिकामपि वर्जयेत् ॥

உலர்ந்துபோனதும், முதல்நாளிலேயே எடுக்கப்பட்டதும், கருப் படைந்ததும், பூமியில் விழுந்ததுமான பூக்களால் அர்ச்சிக்கக் கூடாது. சம்பகம், தாமரை இவ்விரண்டும் நீங்கலாக மற்றைய பூக்களின் மொட்டுகளையும் விலக்கிவிடவேண்டும்.

उग्रगन्धीन्यगन्धीनि कुसुमानि न दापयेत् ।
अन्यायतनजातानि कण्टकीनि तथैवच ॥
रक्तानियानिवर्णैश्च चैत्यवृक्षोद्भवानिच ।
श्मशानजातान्यन्यानि यानि चाकालजानिच ॥

கொடூரமான வாசனையையுடையதும், மணமற்றதும் பிறரின் தோட்டத்திலுண்டானதும் முள்ளுடன் கூடியதும், இரக்தவர்ண முடையதும், நாச்சந்தியிலுள்ள மரங்களிலுள்ளதும், மயானத்தி லுண்டானதும்; மற்றும் அகாலத்தில் பூத்ததுமான பூக்களைக் கொண்டு பூஜிப்பது தகாது.

स्नात्वा मध्याह्नसमये न छिन्द्यात्कुसुमं नरः ।
तत्पुष्पस्यार्चने देवि रौरवे परिपच्यते ॥ (मत्स्यसूक्तम्)

ஒருவன் மத்யாந்ஹஸமயத்தில் முழுகிவிட்டு பூவைப் பரிக்கக் கூடாது. அவ்வாறு பரித்த பூக்களால் அர்ச்சனை செய்யின் அவன் ரௌரவமென்னும் நரகத்தில் கஷ்டங்களையனுபவிப்பான்.

नपुष्पछेदनं कार्यं देवार्थं वामहस्ततः ।
नदद्यात्तानिदेवेभ्यः संस्थाप्यवामहस्ततः ॥

தேவதைகளையர்ச்சிப்பதற்குக் கொய்யும் மலர்களை இடது கையி னால் கொய்தல் தகாது. இடது கையில் வைத்த பூக்களை வானோர் களுக்கு அர்ப்பணஞ் செய்யக்கூடாது.

परारोपितवृक्षेभ्यः पुष्पाण्यानीय योर्चयेत् ।
अविज्ञाप्यचतस्यैव निष्फलं तस्य पूजितम् ॥
याचितं निष्फलं पुष्पं क्रयक्रीतञ्च निष्फलम् ।

"பிறரால் பயிரிடப்பட்ட மரங்களினின்றும் அவர்களுக்கறிவிக் காமல் பூக்களைப் பரித்துவந்து, அவைகளாற் பூஜைசெய்யின் அஃது பயனற்றதாகும். யாசித்துப் பெற்றவைகளும் விலை கொ டுத்து வாங்கியவைகளும் அவ்வாறே ஒரு பயனையும் அளிக்காது" இவைகள் நித்யார்ச்சனைவிஷயத்தைப் பற்றியவைகள். விசே ஷார்ச்சனைகளைக்குறித்து மலர்களை யாசிப்பதும் விலையளித்துப் பெறுவதும் தோஷமாகாதென்பதை முன்பே தெளிவுற கூறி யிருக்கிறேன்.

எல்லா மூர்த்திகளுக்கும் உறிய மலர்கள்.

जाती शमी कुशाः कुंकु मल्लिका करवीरजम् ।
नाग पुन्नाग काशोक रक्तनीलोत्पलानिच ॥
चम्पकं वकुलं चैव पद्मं बिल्वं पवित्रकम् ।
एतानि सर्वदेवानां विहितानि समानिच ॥

ஜாதி, வன்னி, குசம், காட்டுமல்லி, மல்லிகா, செவ்வலரி, நாககே ஸரம், புன்னை, அசோகம், செந்நெய்தல், கருநெய்தல், சம்பகம் மகிழம்பூ, தாமரை, பில்வம், தர்பம், இவைகளெல்லாம் எல்லா தேவதைகளுக்கு உறிய பொதுவானவைகளாகக் கருதப்படு கின்றன.

சிற்சில மூர்த்திகளுக்குறிய மலர்கள்.

ஸ்ரீ துர்க்காதேவியை அந்தந்த ருதுக்களிற் பூக்கும் மல்லி கை, ஜாதி, கிம்சுகம், சம்பகம், கைங்கிரிதம், பாதிரி, மகிழம்பூ, மந்தாரம், குருக்கத்தி, வெள்ளலொத்தி, செவ்வலரி, எருக்கம்பூ, சிம்சுபா, விஷ்ணுக்கிராந்தை, வெளுப்பு, சிகப்பு, மஞ்சள், இந் நான்கு வர்ணங்களுடையவைகளும் வெண்சிகப்பாகவுள்ளவைக

ளுமான பூக்களும் சற்று வெண்மை வாய்ந்த தாமரைகள், தமனம், கொச்சில், ஆனைவணங்கி, கிடாரை, தர்ப்பகமகாத்து, பில்வதளம், முதலிய பூமியில் வளரும் பூக்களாலும், இலைகளாலும், எவ்வித தான்யங்களுடையவும், இலைகளாலும், புஷ்பங்களாலும், அர்ச்சிப்பது உத்தமம். பில்வார்ச்சனை இராஜஸூயபலத்தையும், செவ்வலரிமாலை அக்னிஷ்டோமயாகத்தின் பயனையும், மகிழம்பூமாலை வாஜபேய யாகத்தின் பயனையும் அளிக்கவல்லதென்று பிரயோகபாரிஜாதத்திலும், புஷ்பஸாரஸுதாநிதியிலும், கூறப்பட்டு

शिवार्चने निषिद्धानि पत्रपुष्पफलानिच ।
तानि देव्याःप्रशस्तानि अनुक्तानि विशेषतः ॥
(ताराभक्तिसुधार्णवः)

சிவனை அர்ச்சிப்பதற்கு தகாதவைகளெனவுமுரைக்கப்பட்டுள்ள அத்துளிர்களும் மலர்களும் பழங்களும் விசேஷமாக எடுத்துக் கூறப்பட்டிராவிடினும், தேவிக்கு மிக்கச் சிறந்தவைகளெனக் கொள்ளத்தக்கவைகளாக இருக்கின்றன.

सुन्दरी भैरवी काली तारा ब्रह्म विवस्वताम् ।
विना तुलस्या या पूजा सापूर्णा न कदाचन ॥
सावित्रीञ्च भवानीञ्च दुर्गादेवीं सरस्वतीम् ।
योऽर्चयेत्तुलसीपत्रैः सर्वकामैस्स ऋध्यति ॥

" ஸுந்தரீ, பைரவீ, காளி, தாரா, பிரும்மா, ஸூரியன் இவர்களுக்குத் துளஸியின்றிச் செய்யும் பூஜை ஒருபொழுதும் நிறைவுற்றதாகாது. ஸாவித்திரீ, பவானி, துர்க்காதேவி, ஸரஸ்வதீ, இவர்களைத் துளஸியினால் அர்ச்சிப்பவன் எல்லாவிருப்பங்களையும் நிறையப்பெற்று விளங்குகிறான்." ரஹஸ்யநாமஸாஹஸ்ரத்தில் बिल्वैर्वातुलसीपुष्पैः என்று சொல்லப்பட்டிருப்பதால் ஸ்ரீ லலிதா தேவிக்கு துளஸீ ஏற்றதென்றே தெரிகிறது.

नरत्नैर्नसुवर्णेन नवित्तेनचभूरिणा ।
तथाप्रसादमायाति यथा पुष्पैर्जनार्दनः ॥

ஸ்ரீ விஷ்ணு எவ்வாறு புஷ்பார்ச்சனையால் ஆனந்தம் பெறுவாரோ அவ்வாறு இரத்தினங்களினாலும், ஸுவர்ணத்தினாலும், ஏராளமாகப் பொருள்களைச் சிலவிடுவதனாலும் சந்தோஷம் பெறுவதில்லை.

சில தேவதைகளுக்கு விலக்கியுள்ள மலர்கள்.

शिवे विवर्जयेत्कुन्दं उन्मत्तञ्च हरेस्तथा ।
देवीनामर्कमन्दारौ सूर्यस्य तगरन्तथा ॥ (சாதாதபம்)

சிவனுக்கு குருக்கத்திப்பூவும், விஷ்ணுவிற்கு ஊமத்தம்பூவும், தேவிக்கு எருக்கு மந்தாரம் இவைகளின் பூக்களும், ஸூரியனுக்கு தகரபுஷ்பமும் விலக்கத்தக்கவைகள்.

कुटजं शाल्मलीपुष्पं शिरीषञ्च जनार्दने ।
निवेदितं भयं रोगं निस्वत्वञ्च प्रयच्छति ॥
बन्धुजीवक पुष्पाणि रक्तान्यपि च दापयेत् ।
अनुक्तरक्तकुसुमदानात्सौभाग्यमाप्नुयात् ॥

காட்டுமல்லிகை, சால்மலீ, வாகை இவைகளின் பூக்களை விஷ்ணுவை அர்ச்சிக்க உபயோகிக்கக்கூடாது. அவ்வாறு செய்யின் பயத்தையும், பிணியையும், வறுமையையும் விளைக்கும். செவ்வாத்தைப்பூ சிவப்பாயிருப்பினும் உபயோகிக்கத்தக்கதே. விதிக்கப்படாத மற்ற சிவப்புப்பூக்களால் அவரையர்ச்சிக்கின் மிக்க ஸௌபாக்கியசாலியாவான்.

बन्धूकं केतकीकुन्दं केसरं कुटजंजपाम् ।
शङ्करे नार्पयेद्विद्वान् मालतीं यूथिकामपि ॥
शक्तौ दूर्वार्कमन्दारान् मालूरन्तगरं रवौ ।
विनायकेतु तुलसीं नार्पयेत्जातुचिद्बुधः ॥

"உச்சித்திலகம், தாழை, குருக்கத்தி, நாககேஸரம், காட்டுமல்லி, செவ்வாத்தை, மாலதீ, யூதிகா முதலியவைகளின் புஷ்பங்களை அறிஞர்கள் சிவபூஜையில் உபயோகிக்கக்கூடாது. தேவியின் அர்ச்சனையில் அருகம்புல், எருக்கு, மந்தாரை இவைகளையும், ஸூர்யனுக்கு பில்வம் தகரம் இவ்விரண்டையும், விநாயகருக்கு, துளஸியையும் ஒரு பொழுதும் உபயோகித்தல் தகாது."

இங்கு தேவியின் ஆராதனையில் எருக்கம்பூவை விலக்கியிருப்பது துர்க்கை நீங்கலாக மற்றவர்கள் விஷயத்திலெனக் கொள்ள வேண்டும்.

नाक्षतैरर्चयेद्विष्णुं न तुलस्या विनायकम् ।
न दूर्वयार्चयेद्दुर्गां न केतक्या सदाशिवम् ॥

(தொடரும்)

N. வைத்யனாதசாஸ்திரி

விவாஹம்.

ஆஸ்திகர்களே! நமது தேசத்தில் ஆத்மோந்நதியையும், ச்ரேயஸ்ஸையும் அடைவதன்பொருட்டு அனுஷ்டிக்கவேண்டிய காரியங்கள் புருஷர்களுக்கு இருப்பதுபோல் ஸ்திரீகளுக்கும் ப்ரத்யேகமாக சில தர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன, ஸ்திரீகளை போகத்தையனுபவிப்பதற்காகமாத்திரம் பகவான் ஸ்ருஷ்டிக்கவில்லை. இதுதான் மேனாட்டு ஸ்திரீகளுக்கும், நமது தேசத்து ஸ்திரீகளுக்கும் உள்ள பரஸ்பரவித்யாஸம். மேனாட்டார் ஸ்திரீகளை போகத்திற்காக ஏற்பட்டவர்களாகவே கருதுகின்றனரேயன்றி அவர்களின் ஸஹாயத்தால் செய்யவேண்டிய தர்மகாரியங்களும் இருக்கின்றனவென்று அவர்கள் நம்புவதில்லை. நாமோ ஸ்திரீகளை ஸஹாயமாய் வைத்துக்கொண்டு இஹபரஸௌக்யத்தையும் முடிவில் மோக்ஷத்தையும் ஸம்பாதித்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றோம். முதல்முதலாக மேனாட்டார் இந்நாட்டில் ப்ரவேசிக்கும்போது இந்நாட்டு ஸ்திரீமணிகளின் நடையுடைபாவனைகளையும் புடவை தரித்துக்கொள்ளும் மாதிரிகளையும், குங்குமம், மஞ்சள், முதலிய மங்கள த்ரவ்யங்களை உபயோகித்துக்கொள்ளும் விசேஷத்தையும், பதிவ்ரதா தர்மங்களையும் கண்ணுற்று வியப்படைந்து, இந்தியஸ்திரீகளை வெகுவாகப்புகழ்ந்து புஸ்தகங்களும் எழுதியிருக்கின்றனர். இக்காரணம்பற்றியே புருஷர்களுக்கு வைதிக காரியங்களில் ஸஹாயம் புரிந்து அக்காரியங்களின் பயன்களையும் அனுபவிப்பதாலேயே "பத்நீ" "ஸஹதர்மசாரிணீ" என்ற சப்தங்

களாலும், அவர்களை வ்யவஹரிப்பது வழக்கம். ஆனால் விவாஹ மூலமாக கிரகித்துக்கொள்ளப்பட்டிருக்கும் ஸ்திரீயினிடத்தில் தான் இவ்வித சப்தப்பிரயோகம் சாஸ்திரஸம்மதமாகுமேயன்றி மற்ற ஸ்திரீகளிடத்தில் தகாது. இந்த அர்த்தம் தாரமென்ற சப்தப்பிரயோகத்தாலேயே நன்கு விளங்குகின்றது. தாரமென்ற சப்தத்திற்கு அக்நிஸாக்ஷிகமாகவும், ஸமந்த்ரகமாகவும், ஸப்தபதி முடிய உள்ள விவாஹத்தால் கிரஹித்துக்கொள்ளப்படும் ஸ்திரீ என்று பொருள். இவ்விஷயத்தை

पाणिग्रहणिकामन्त्रा नियतं दारलक्षणम् ।
तेषां निष्ठातु विज्ञेया विद्वद्भिस्सप्तमे पदे ॥

என்ற தர்மசாஸ்திரமும் அழுத்தமாய் உரைக்கின்றது. அன்றியும் நமது தேசத்தில் ஸ்திரீகள் விவாஹம் செய்துகொள்ளாமல் இருக்கக்கூடாதென்ற நியமமுண்டு. புருஷர்களோ விவாஹம் செய்துகொண்டு கிருஹஸ்தனாக இருப்பதற்கு விருப்பமிருந்தால் தனக்கு வந்த ஒரு ஸ்திரீயை விவாஹம் செய்து கொள்ளலாம். இன்றேல் பிரும்மசாரியாகவோ, அல்லது பரமஹம்சியாகவோ, இருந்துகொண்டும் க்ஷேமத்தை அடையலாம். ஆகவே ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்யம். புருஷர்களுக்கு காம்யம். என்று தர்மசாஸ்திர சித்தாந்தம். எவ்விதம்புருஷர்களைபிராமணனென்றும் க்ஷத்திரியனென்றும், வைசியனென்றும் வ்யவஹரிப்பதற்கு உபநயனம் என்ற ஸம்ஸ்காரம் அவசியம் அனுஷ்டிக்க வேண்டுமோ அவ்விதமே ஸ்திரீகளையும் பிராமணஜாதி ஸ்திரீ என்று வ்யவஹரிக்க வேண்டுமாயின் உபனயன ஸ்தானத்தில் விதித்துள்ள விவாஹமும் அவசியமேயாகும். இந்தப் பிரயோஜனத்திற்காகத்தான் விவாஹமேயொழியபோகத்திற்காகஇல்லை. போகானுபவம்விவாஹம்செய்துகொள்ளாவிட்டாலும் ஏற்படலாம். ஆகையால்தான் விவாஹகாலத்தில், "धर्मप्रजासंपादनार्थं" என்று ஸங்கல்பமும் செய்துகொண்டு வருகிறோம். மனுவும்,

अपत्यं धर्मकार्याणि शुश्रूषा रतिरुत्तमा ।
दाराधीनस्तथास्वर्गः पितृणामात्मनस्तथा ॥

என்று நாமனுஷ்டித்துவரும் விவாஹத்திற்குப் பிரயோஜனம் அனேகமுண்டென்று நிரூபித்துள்ளார். அதாவது அக்னிஸாக்ஷிகமாகவும், மந்திரோதக புரஸ்ஸரமாகவும் விவாஹஞ்செய்துகொண்ட மனைவியின் மூலமாகத்தான் உத்தமபுதல்வன், தர்மகாரியங்கள், உத்தமப்பணிவிடை ஸர்வோத்தமமான ஆனந்தம், ஸ்வர்கம், மோக்ஷம், இவைகள் ஸித்திக்கவேண்டும் என்று இம்மனு வசனத்திற்கு அர்த்தமாகும். விவாஹம் செய்துகொள்ளாமலும் ஸ்திரீகளிடமிருந்து புத்திரனை உத்பத்திபண்ணிவிடலாம். ஆனால் ஸத்புத்திரன் உண்டாக வேண்டுமென்ற விருப்பமிருந்தால் விவாஹந்தான் செய்துகொள்ளவேண்டும். இவ்விஷயத்தை

अनिन्दितैः स्त्रीविवाहैरनिन्द्या भवति प्रजा ।

என்ற சுலோகத்தினாலும், மனு எடுத்துக்காட்டியுள்ளார். இதனால் நாம் அறியவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. தேச ஸேவையிலும், ஞானக்ரியாசக்திகளிலும், சிறப்புற்று வீர்யமுள்ள புதல்வனை அடைவதற்கு பாலிகா விவாஹம் தான் பிரதிபந்தகமாக இருக்கின்றது; தானாகவே தனக்கிஷ்டமுள்ள கணவனை மணந்துகொள்ளும் பக்ஷத்தில் இந்த தோஷமே ஏற்படுவதற்கு நியாயமில்லை என்ற தற்காலத்தியவர்களின் ஆசங்கைக்கும் இம்மனுவசனம் ஸமாதானமாகும். இவ்வித சங்கைகளுக்கு அனேக யுக்திகளையும் பதிலாக எடுத்துக்காட்டமுடியுமானாலும், ஸமயாந்தரத்தில் அவைகளை விசாரிப்போம்.

தர்மகாரியங்களைச் செய்வது விவாஹத்துக்கு இரண்டாவது பிரயோஜனமாக மனு கூறுகிறார். புருஷர்கள் செய்யக்கூடிய உத்தியோகம், வித்யாப்பியாசம், உபன்யாசம் முதலியவைகளைச் செய்வது ஸ்வதந்திரமாய் வெளியில் செல்வது முதலிய லௌகிக காரியங்களில் ஸ்திரீகள் ஸஹாயம் புரியவேண்டியதில்லை. தர்மகாரியங்களைச் செய்யும் விஷயத்தில் தான் ஸ்திரீகள் ஸஹாயம் செய்யவேண்டும் என்று தர்மபதவிசேஷண மஹிமையால் ஏற்படுகின்றது. மூன்றாவது "சுச்ரூஷை" என்ற பிரயோஜனம். சுச்ரூஷை என்பது பதியின் இஷ்டப்படி நடப்பதேயாகும். பொதுவாக புருஷர்கள் செய்யும் சுச்ரூஷையைக் காட்டிலும் ஸ்திரீகளுடைய சுச்ரூஷைக்கு கௌரவம் அதிகம். ஆகையால்தான் இப்போது ஆஸ்பத்திரிகளில் வியாதிஸ்தர்களுக்கு ஸ்திரீகளையே சுச்ரூஷைப்

புரியுமாறு நியமனம் பண்ணப்பட்டிருக்கின்றது. ஆகவே ஸ்திரீகளின் சுச்ரூஷைக்கு சுகமதிகம்என்றுநிச்சயமாய்த்தெரிகின்றது. விவாஹபூர்வகம் ஏற்பட்ட ஸ்திரீகளால் ப்ரேமபுரஸ்ஸரம் செய்யப்படும் சுச்ரூஷையின் மஹிமையை எடுத்துக்கூறவே முடியாது. சுச்ரூஷையினால் தான் ஸ்திரீகளுக்கு பாதிவ்ரத்யம் என்ற தபஸ் விருத்தியாக வேண்டும். மனோவாக்காயங்களால் பதிக்குப் பணிவிடை புரிவதுதான் பாதிவ்ரத்யமாகும். இவ்விஷயத்தை அனுஸூயா ஸீதா ஸம்வாதத்தில் விரிவாய்க் காணலாம்.

தற்காலத்தில் பதிசுச்ரூஷையைக் குறைவாக ஸ்திரீகள் கருதுகிறார்கள். மனு முதலிய மஹரிஷிகள் பதி சுச்ரூஷை முதலிய காரியங்களால் ஸ்திரீகளை நிர்ப்பந்தத்துள்ளாக்கி விட்டார்களென்றும் நினைக்கிறார்கள். மனு முதலியவர்கள் ஸ்திரீகளை பலவிடங்களில் புகழ்ந்தும் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு பக்ஷபாதம் கொஞ்சங்கூட கிடையாது. ஆகவே உத்தம சுகத்துக்கு சுச்ரூஷைதான் காரணம். இதனால் ஸ்திரீகள் தன்னை பாதந்த்ரர்களென்று கருதுவது புத்திஹீனம். ஆகையால் விவாஹம் ஸ்திரீகளுக்கு அவசியம். ஆனால் அவர்களின் விவாஹகாலத்தில் பெருத்தப் போராட்டம் சில காலமாக ஏற்பட்டுவிட்டது. இதுவும் கலி மஹிமைதான். இது விஷயமாக சட்டசபைகளிலும் சண்டையிட்டு இதுவரையில் பெரும்பாலும் வழக்கமாய் அனுஷ்டித்துவரும் காலத்தை மாற்றி சட்டமும் ஏற்பட்டுவிட்டது. இச்சட்டத்திற்கு சாஸ்திரமும் ஸாதகமென்று நமக்குள்ளும் சிலருக்கு சந்தேகம் இன்னும் நிவர்த்தியாகவில்லை, சாஸ்திரபூர்வகமாக ஸ்திரீகளின் விவாஹகாலத்தை நிர்ணயிப்பதற்காக “வயோநிர்ணயம்” என்ற கிரந்தமும் பிரும்மஸ்ரீ வேதாந்தகேஸரி பைங்காநாடு கணபதிசாஸ்திரிகளால் வெளியிடப்பட்டிருக்கின்றது. அடுத்தவாரம் முதல் அக்கிரந்தத்தை எளிய தமிழ் நடையில் யாவரும் அறியுமாறு மொழிபெயர்த்து வெளியிடுவதாகவும் உத்தேசம். அதனாலேயே நம்மவர்களுக்குஇருக்கும் சம்சயங்களெல்லாம் நிவர்த்தி அடைந்துவிடும் என்று எனது நம்பிக்கை.

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்,
ஸ்ரீமடம் உபன்யாஸகர்.